**வத்தளை பிரதேச சபை**
**கம்பஹா மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2019 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2020 மார்ச் 03 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் சுருக்கமான அறிக்கை 2020 யூலை 31 ஆந் திகதியும் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2020 செப்தெம்பர் 30 ஆந் திகதியும் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து வத்தளை பிரதேச சபையின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | இருப்பு களஞ்சிய மெய்மெய்யாய்வு அறிக்கையின் பிரகாரம் ரூபா 5,483,303 தொகையான பொது களஞ்சிய இருப்புக்கள் நிதிக் கூற்றுக்களில் ரூபா 6,502,396 ஆக காண்பிக்கப்பட்டமையினால் ரூபா 1,019,093 இனால் இருப்பு அதிகரித்து காண்பிக்கப்பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | எதிர்காலத்தில் சரிசெய்யப்படும். |
| (ஆ) | பழைய அம்பலம சனசமூக மண்டப காணியின் பெறுமதி நிலையான சொத்துப் பதிவேட்டின் பிரகாரம் ரூபா 335,391 ஆக இருந்த போதும், அது ரூபா 60,000 ஆக மூலதனமாக்கப்பட்டிருந்தது. | சரியான பெறுமதி மூலதனமாக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் சரிசெய்யப்படும். |
| (இ) | 02 கடன் கொடுத்தோர்களுக்கு உரியதாக ரூபா 133,857 தொகை மேலதிகமாக கணக்கீடு | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | பட்டோலைகளை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

| | | | |
|---|---|---|---|
| | செய்யப்பட்டிருந்ததுடன், 03 கடன் கொடுத்தோர்களுக்குரிய ரூபா 72,050 தொகை குறைவாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | | |
| (ஈ) | சம்பளமற்ற விடுமுறைக்காக அறவிட வேண்டிய ரூபா 439,879 தொகை கடன்பட்டோராக காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | அறவிட வேண்டிய பெறுமதி கடன்பட்டோராக ஒதுக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (உ) | வழங்கல், உபகரணங்கள் மற்றும் மூலதன உபகரண செலவினக் கணக்கின் மீதி முறையே ரூபா 750,000 மற்றும் ரூபா 10,000 தொகை குறைவாக வருமான செலவின கணக்கில் காண்பிக்கப்பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | எதிர்பாலத்தில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ஊ) | பிரதேச சபைக்குச் சொந்தமாக காணப்படுகின்ற மின் பிறப்பாக்கி பெறுமதி இடப்பட்டு நிதிக் கூற்றுக்களுக்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | 2020 ஆம் ஆண்டில் சரிசெய்யப்படும். |

**1.3.2 கணக்காய்விற்கு தேவையான சான்றுகள் காணப்படாமை.**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ரூபா 293,684,281 தொகையான 06 கணக்கு விடயங்களை சான்றுறுதிப்படுத்துவதற்கு தேவையான தகவல்கள் சமர்ப்பிக்கப்படவில்லை. | சுட்டிக்காட்டப்பட்டுள்ள கணக்காய்வு சான்றுகள் கணக்காய்விற்காக கணக்குகளுடன் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | 2020 ஆம் ஆண்டின் போது சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

**1.3.3 இணக்கம் செய்யப்படாத கணக்குகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 05 கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகைக்கும் அதன் பட்டோலைகளின் பிரகாரமான கூட்டுத்தொகைக்கும் இடையே ரூபா 37,681,502 தொகையான வேறுபாடு காணப்பட்டது. | பதிவேடுகள் மற்றும் பட்டோலைகளை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 2020 ஆம் ஆண்டின் போது சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | ஊழியர் கடன் பதிவேட்டின் பிரகாரம் ரூபா 595,753 தொகை குறைவாக காண்பிக்கப்பட்டிருந்தது. மேலும், 2019 திசெம்பர் 06 ஆம் திகதி 93 ஊழியர்களுக்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 930,000 தொகையான விழா முற்பணமும் பட்டோலையில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | பதிவேடுகள் மற்றும் பட்டோலைகளை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | தற்போது சரிசெய்வதற்கு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. |

**1.4 இணங்காமைகள்**

**1.4.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டம் | | | |
| 24(1)(ஆ) பிரிவு | சபை அதிகார பிரதேசத்திற்குரிய வீதிகள் கையேற்கப்படாதிருந்ததுடன், சபைக்குச் சொந்தமான வீதிகளின் எண்ணிக்கை 1909 ஆக இருந்த போதிலும் அவைகள் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டிருக்கவில்லை. | அதிகாரச் சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | சபைக்குச் சொந்தமான 30 வீதிகளை வர்த்தமானியில் பிரசுரிப்பதற்காக அளவிடும் நடவடிக்கைகள் இறுதிக் கட்டத்தில் உள்ளது. |
| 219 ஆம் பிரிவு | பிரதேச சபைக்கு எந்தவொரு உறுப்பினரோ அல்லது ஊழியரோ பிரதேச சபையுடன் ஏற்படுத்திக் கொள்கின்ற எந்தவொரு உடன்படிக்கையோ அல்லது வேலையோ நிதி தொடர்பாக நேரடியாக அல்லது மறைமுகமாக இருக்க முடியாதிருந்த போதிலும், உறுப்பினர் ஒருவரின் மனைவிக்கு விழா மண்டபம் வாடகைக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் | அதிகாரச் சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றோம். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | அதில் 2009 மே 30 ஆம் திகதி முதல் ரூபா 974,800 தொகையான வாடகை மீதியொன்று அறவிட வேண்டியிருந்தது. | | |
| (ஆ) | 1988 இன் பிரதேச சபைகள் (நிதி மற்றும் நிர்வாகம்) விதி 193. | பாதீடுசெய்யப்பட்ட நிதிஏற்பாடு மற்றும் குறைநிரப்பு அங்கீகரிக்கப்பட்ட மற்றும் இணக்கம் செய்யப்பட்ட ஒவ்வொரு வருமான மற்றும் செலவின விடயங்களின் கீழ் பற்றாக்குறைகள், மிகைகள் அல்லது சேமிப்புக்கள் தொடர்பாக விடயங்களை விளக்குகின்ற கூற்றொன்று கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்படவில்லை. | பிரதேச சபைகள் விதியின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தயாரிக்கப்பட்டு கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்படும். |
| (இ) | இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் 571 | ரூபா 2,405,622 தொகையான 02 வருடங்களை விஞ்சிய வைப்புக்கள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்காலத்தில் அந்த வைப்புக்களை சபையின் நிதியத்திற்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

## 1.5 பெறவேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய மீதிகள்

### (அ) பெறவேண்டிய மீதிகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நானாவித கடன்பட்டோர் மீதியில் 5 – 10 வருடங்களுக்கு இடையில் ரூபா 974,800 தொகை, 1 – 3 வருடங்களுக்கு இடையில் ரூபா 6,713,002 தொகை மற்றும் ஒரு வருடத்தை விட குறைவான ரூபா 68,676,781 தொகை காணப்பட்டது. | பெறவேண்டிய மீதிகளை விரைவாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ii) | வேலைகளுக்காக 2016 ஆம் ஆண்டு முதல் 2018 ஆம் ஆண்டு வரை கிடைக்கவேண்டிய ரூபா 6,713,002 தொகை கிடைத்திருக்கவில்லை. | பெறவேண்டிய மீதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

## (ஆ) செலுத்தவேண்டிய மீதிகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கடன்கொடுத்தோர் மீதியில் 5 – 10 வருடங்களுக்கு இடையில் ரூபா 64,774 தொகை, 1 – 3 வருடங்களுக்கு இடையில் ரூபா 49,146,947 தொகை மற்றும் 1 வருடத்திற்கு குறைவான ரூபா 134,040,433 தொகை என்பன காணப்பட்டது. | தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ii) | 2013 ஆம் ஆண்டு முதல் இலங்கை அரச பொறியியல் கூட்டுத்தாபனத்துக்கு செலுத்த வேண்டிய ரூபா 64,774 தொகை மற்றும் 2016 ஆம் ஆண்டில் நிலுவை ஆதனவரி சேகரித்தலுக்காக செலுத்த வேண்டிய தொகை ரூபா 157,012 ஆன தரகு பணம் என்பன தீர்த்து வைக்கப்பட்டிருக்கவில்லை. | செலுத்த வேண்டிய பணத்தை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 2016 ஆம் ஆண்டில் நிலுவை ஆதன வரி சேகரித்தல் தொடர்பாக காணப்படுகின்ற புலனாய்வின் இறுதி தீர்மானத்தின் அடிப்படையில் ரூபா 157,012 தரகுப் பணம் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படும். |
| (iii) | 2008 ஆம் ஆண்டு முதல் நீர்வேலைக் களஞ்சியமாக பெயரிடப்பட்ட இனங்காணப்பட்டாத ரூபா 729,708 தொகையான மீதி மற்றும் ரூபா 22,175 தொகையான தற்காலிக ஓய்வூதியமாக பெயரிடப்பட்ட செலவு மீதி என்பவற்றை தீர்த்து வைக்காமல் தொடர்ச்சியாக முன் கொண்டுவரப்பட்டிருந்தது. | இனங்காணப்படாத மீதிகளை இனங்கண்டு தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | 2020 இன் இறுதிக் கணக்குகள் தயாரிக்கும் போது தீர்க்கப்படும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 22,483,963 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 93,428,047 ஆக இருந்தது.

### 2.2 நிதிக் கட்டுப்பாடு

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | சபை நிதியம் பிரதேசத்தின் மக்களுக்கு ஆகக்கூடிய நலன்கள் கிடைக்கக் கூடிய வகையில் திட்டமிடப்பட்டு செலவிடல் சபையின் நோக்கமாக இருந்த போதிலும், ரூபா 64.23 மில்லியன் முன் திட்டமிடலின்றி 20 நிலையான வைப்புக்களில் முதலீடு செய்யப்பட்டிருந்தது. | நிதிஏற்பாடுகளில் இருந்து ஆகக்கூடிய நலன்கள் பெறப்பட வேண்டும். | 2020 ஆம் ஆண்டின் போது ஆகக்கூடிய நலன்களை பெறும் வகையில் செலவிடுவதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது. |
| (ஆ) | ஹெந்தல வியாபார கட்டிடத் தொகுதியின் விழா மண்டபத்திற்காக கிடைக்க வேண்டிய வாடகைக்காக 2014 ஆம் ஆண்டின் போது கிடைத்த 974,800 பெறுமதியான காசோலை மதிப்பிழந்திருந்த போதிலும் காசு பெறப்பட்டிருக்கவில்லை. | பெறவேண்டிய வருமானம் அந்தந்த காலப்பகுதிகளில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றோம். |

### 2.3 வருமான நிர்வாகம்

#### 2.3.1 மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | வருமானம் | 2019 மதிப்பிடப்பட்ட வருமானம் | 2019 சிட்டையிடப்பட்ட வருமானம் | 2019 சேகரிக்கப்பட்ட வருமானம் | 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | 2018 மதிப்பிடப்பட்ட வருமானம் | 2018 சிட்டையிடப்பட்ட வருமானம் | 2018 சேகரிக்கப்பட்ட வருமானம் | 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | 81,888,000 | 93,055,708 | 94,277,899 | 57,770,373 | 78,650,700 | 87,885,932 | 95,446,728 | 58,992,564 |
| (ii) | வாடகை | 6,076,700 | 8,478,117 | 8,021,476 | 6,528,760 | 2,700,000 | 2,160,330 | 2,160,330 | - |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 2,850,000 | 2,752,411 | 2,752,411 | - | 4,000,250 | 4,508,171 | 4,981,498 | 6,072,119 |
| (iv) | ஏனைய வருமானம் | 108,501,057 | 49,912,427 | 49,912,427 | - | 148,821,550 | 183,357,043 | 183,357,043 | - |
| | | 199,315,757 | 154,198,663 | 154,964,213 | 64,299,133 | 234,172,500 | 277,911,476 | 285,945,599 | 65,064,683 |

### 2.3.2 வீதவரியும் வரியும்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ஹெந்தல உப அலுவலகத்தில் நிலுவை ஆதனவரி ரூபா 200,000 தொகைக்கு மேற்பட்ட 04 அலகுகளும், ரூபா 100,000 தொகைக்கு மேற்பட்ட 07 ஆதனவரி அலகுகளும், ரூபா 75,000 தொகைக்கு மேற்பட்ட 07 அலகுகளும், ரூபா 60,000 தொகைக்கு மேற்பட்ட 01 அலகும் காணப்பட்டன. | நிலுவை ஆதனவரியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | நிலுவை ஆதனவரியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. |

### 2.3.3 சுற்றாடல் அனுமதிப்பத்திர வருமானம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) சுற்றாடல் அனுமதிப் பத்திரங்களில் இருந்து ரூபா 100,000 தொகையை பெற்றுக் கொள்வதற்கு மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. எனினும் உப அலுவலகங்கள் மூன்றுக்கும் உரிய சுற்றாடல் அனுமதிப் பத்திரம் பெற வேண்டிய சகல நிறுவனங்களும் இனங்காணப்பட்டிருக்கவில்லை. | சுற்றாடல் அனுமதிப் பத்திரம் பெற வேண்டிய நிறுவனங்களை இனங்கண்டு வருமானத்தை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | தாமதமின்றி களப் பரிசோதனையொன்று மேற்கொண்டு சுற்றாடல் அனுமதிப் பத்திரத்தை வழங்குதல் தொடர்பாக கூடிய கவனம் செலுத்துமாறு உரிய பிரிவுகளுக்கு அறிவிக்கப்படும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 05 நிறுவனங்களுக்கு சுற்றாடல் அனுமதிப் பத்திரம் இரத்துச் செய்யப்பட்டிருந்த போதிலும், புதுப்பித்துக் கொள்வதற்கு விண்ணப்பங்களை சமர்ப்பித்திருக்கவில்லை. | சுற்றாடல் அனுமதிப் பத்திரம் வழங்குதல் மற்றும் அது தொடர்பாக பின்தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். | அனுமதிப்பத்திரத்தை பெற்றுகொள்வது தொடர்பாக கூடிய கவனம் செலுத்தமாறு உரிய பிரிவுகளுக்கு அறிவிக்கப்படும். |

**2.3.4 தொலைத்தொடர்பு கோபுர வருமானம்.**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 35 தொலைத்தொடர்பு கோபுரங்கள் இனங்காணப்பட்ட போதும் கோபுரங்களுக்கு பொருத்தப்பட்டுள்ள போட்டி மாற்ற உபகரணத்திற்குரிய நிறுவனங்களில் இருந்து வியாபார வரியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உரிய வருமானங்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 2021 ஆம் ஆண்டிற்கான வருடாந்த வரி விதிக்கும் போது வியாபார வரியின் கீழ் தொலைத்தொடர்பு கோபுர வரி அறவிடுவதற்காக உரிய பட்டோலையில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ஆ) | ஹெந்தல உப அலுவலகத்தில் 13 கோபுரங்களில் இருந்து ரூபா 244,802 தொகையான கோபுர வருமானம் நிலுவையாக காணப்பட்டது. | நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் அறவிடப்படும். |

**2.2.5 நிலுவை கடை வாடகை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ஹெந்தல உப அலுவலகத்திற்குரிய கெரவலப்பிட்டியவில் 25 கடைகளில் இருந்து 2012 ஆம் ஆண்டு முதல் 2019 செப்தெம்பர் 30 வரை ரூபா 2.57 மில்லியன் மற்றும் கெரவலப்பிட்டிய சந்தைக் கட்டிட தொகுதியின் முத்திரையிடப்பட்ட 16 கடைகளில் இருந்து 2012 முதல் 2017 வரை ரூபா 3.69 மில்லியன் தொகைகள் நிலுவையாக காணப்பட்டது. | நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

### (அ) உப விதிகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 126 பிரிவின் கீழ் 21 பிரதான விடயங்களை நிறைவேற்றுவதற்காக உப விதிகள் விதிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், 2019 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் சபையினால் 12 விடயங்களுக்காக மாத்திரம் உப விதிகள் விதிக்கப்பட்டிருந்தது. | சபைக்கு உரியதான உப விதிகளை விதித்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 2020 ஆம் ஆண்டின் போது பல விடயங்கள் தொடர்பாக உப விதிகள் விதித்துக் கொள்வதற்கு கவனம் செலுத்தப்பட்டுள்ளது. |

### (ஆ) செயல்நடவடிக்கைத் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் பூர்த்தி செய்யப்பட வேண்டிய 06 இலக்குகள் மீளாய்வாண்டின் இறுதி திகதி வரையிலும் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. | திட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | நிதிஏற்பாடு ஒதுக்கப்படாமையினால் நிறைவேற்றுவதற்கு முடியாதிருந்து. |

### (இ) கைவிடப்பட்ட இலக்குகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2019 ஆம் ஆண்டில் பிரதேச சபைக்கு கம்பெரலிய அபிவிருத்தி செயற்திட்டத்தின் கீழ் கிடைத்த வேலைகளில் 246 செயற்திட்டங்களில் 37 கைவிடப்பட்டிருந்தது. | நிதிஏற்பாடு இன்றிய செயற்திட்டங்களுக்காக நிதி ஏற்பாடு ஒதுக்கப்பட வேண்டும். | அமுல்படுத்தப்படாதுள்ள செயற்திட்டங்கள் மற்றும் உடன்படிக்கை செய்யாதுள்ள 37 செயற்திட்டங்கள் என்பவற்றை நிறைவேற்றுவதற்கு முடியாதிருந்தது. |

**(ஈ) எதிர்பார்த்த நலன்கள் பெற்றுக்கொள்ளப்படாமை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ஹெந்தல மாடு அறுவைக்கூட நிலையம் அமைந்துள்ள காணியில் 2014 ஆம் ஆண்டு ரூபா 20 இலட்சம் செலவில் கட்டிடம் ஒன்று அமைக்கப்பட்ட போதிலும், கட்டிடத்திலிருந்து எந்தவொரு நலனும் பெறப்பட்டிருக்கவில்லை. | சபைக்கு நலன்கள் பெறக்கூடிய வகையில் பணிகளில் ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றோம். |

**(உ) சுற்றாடல் பிரச்சினைகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சுற்றாடல் பிரச்சினைகள் தொடர்பாக மீளாய்வாண்டின் போது 217 பொதுமக்கள் முறைப்பாடுகள் கிடைத்திருந்ததுடன் அதில் 73 முறைப்பாடுகள் தீர்த்து வைக்கப்பட்டிருக்கவில்லை. | தீர்க்கப்படாதுள்ள பொதுமக்கள் முறைப்பாடுகள் தொடர்பாக அதிக கவனம் செலுத்துதல் வேண்டும். | பொதுமக்கள் முறைப்பாடுகள் தொடர்பாக அதிக கவனம் செலுத்தப்பட்டுள்ளது. |

**(ஊ) நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைந்து கொள்வதற்காக உலகலாவிய குறிகாட்டிகளின் மூலம் பிரதேச சபை அதிகார பிரதேசத்தில் பொது மக்களின் வாழ்க்கை நிலை மற்றும் சுகாதார நிலைமைகளை கட்டியெழுப்புவதற்கான நீண்ட கால திட்டமொன்று 2019 ஆம் ஆண்டிற்காக அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை. 2019-2023 வரை நிலைபேறான அபிவிருத்தி திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருந்தது. | உரிய திட்டத்தை அமுல்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 2019 ஆம் ஆண்டில் நாட்டில் காணப்பட்ட பாதுகாப்பற்ற நிலைமையின் காரணமாக அந்த வருடத்தில் குறித்த நிகழ்ச்சித் திட்டங்களை அமுல்படுத்துவதில் பிரச்சினைகள் ஏற்பட்டிருந்தன. |

## 3.2 மனிதவள முகாமைத்துவம்

### (அ) ஊழியர் வெற்றிடம்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | 2013 ஆம் ஆண்டு முதல் நூலகர் பதவியொன்று, 2013 மற்றும் 2017 ஆம் ஆண்டு முதல் 02 வருமான பரிசோதகர் பதவிகள், 2018 ஆம் ஆண்டு மற்றும் 2019 மார்ச் முதல் 02 முகாமைத்துவ உதவியாளர் பதவிகள் மற்றும் 2013 முதல் முன்பள்ளி பாடசாலை ஆசிரியர் ஒருவர் என்ற பதவிகள் வெற்றிடமாக காணப்பட்டன. | வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | சகல ஆட்சேர்ப்புக்களும் அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கீழ் மேற்கொள்ளப்படுகின்றமையினால் ஒவ்வொரு காலாண்டிலும் வெற்றிடங்கள் தொடர்பான காலாண்டு அறிக்கை மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. |
| (ii) | ஆரம்ப சேவை தொகுதியில் 12 சுகாதார தொழிலாளர்கள் மற்றும் 35 வேலைத்தள தொழிலாளர்கள் ஆகியோருக்கு நிரந்தர நியமனம் வழங்கப்பட்டிருந்த போதிலும், அங்கீகரிக்கப்பட்ட பதிவியணியில் உள்ளீர்க்கப்பட்டிருக்கவில்லை. | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரை திருத்திக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | இது தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

### (ஆ) சம்பளமற்ற விடுமுறை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 35 ஊழியர்களால் மீளாய்வாண்டில் 366 சம்பளமற்ற விடுமுறை தினங்கள் பெறப்பட்டிருந்ததுடன், 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிட வேண்டியிருந்த தொகை ரூபா 439,879 ஆகும். | பெறவேண்டிய பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | எதிர்வரும் மாதங்களின் போது சகலவற்றையும் அறவிடுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. |

### (இ) ஊழியர் கடன்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சேவையை விட்டு விலகிய / மரணமடைந்த 17 உத்தியோகத்தர்களிடம் இருந்து 2012 | பெறவேண்டிய மீதிகளை | விடயப் பொறுப்பு உத்தியோகத்தரின் |

| | | |
|---|---|---|
| ஆம் ஆண்டு முதல் 2018 ஆம் ஆண்டு வரை அறவிடப்படாதுள்ள ரூபா 70,100 தொகையான இடர் மற்றும் விழா முற்பண மீதியும், 16 வருடங்களுக்கு முன்னிருந்து கொண்டுவரப்படுகின்ற 07 உத்தியோகத்தர்களிடம் இருந்து அறவிடப்படாதுள்ள ரூபா 94,380 இடர் கடன், விஷேட மற்றும் விழா பத்திர முற்பண மீதியும் காணப்பட்டன. | அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இடமாற்றத்தின் காரணமாக நாளது வரையாக்கப்படாத ஊழியர் கடன் பதிவேடு மற்றும் பட்டோலைகள் இன்னும் ஒரு உத்தியோகத்தரின் உதவியுடன் தற்போது சரிசெய்வதற்கு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. |

### 3.3 செயற்பாட்டு செயற்திறனின்மை

### (அ) ஆதன வரி மதிப்பீடு திருத்தங்கள் மேற்கொள்ளப்படாமை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| இறுதி தடவையாக சபை அதிகார பிரதேசத்தில் அசைவுறாத ஆதனங்கள் மதிப்பீடு செய்யப்பட்டு 10 வருடங்கள் கடந்திருந்த போதிலும் மதிப்பீடு மீள்திருத்தம் செய்யப்படாமையினால் சபை அதிகார பிரதேசத்திற்குரிய 58,003 ஆதனங்களில் இருந்து தற்போதைக்கு பொருத்தமான மீள்திருத்த மதிப்பீட்டு பெறுமதி அறவிடப்பட்டிருக்கவில்லை. | அசையாத ஆதனங்கள் முறையான பிரகாரம் புதிய மதிப்பீடொன்று செய்யப்பட வேண்டும். | எதிர்காலத்தில் மதிப்பீடு திருத்தம்செய்யப்பட்டு அதன் பிரகாரம் அமுல்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது. |

### (ஆ) காணி விற்பனை அடிப்படையிலான வரி

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபை அதிகார பிரதேசத்தில் கூறுகளாக்கப்பட்டு விற்பனை செய்யப்பட்ட காணிகள் தொடர்பாக காணி விற்பனை விலையின் அடிப்படையில் அறவிட வேண்டிய இலக்கம் 01 சதவீத வருமானம் அறவிடும் போது வருமான பிரிவின் உத்தியோகத்தரின் மதிப்பீட்டு விலையை அடிப்படையாகக் கொண்டு பணம் அறவிடப்பட்டிருந்தது. மீளாய்வாண்டில் ஹெந்தல உப அலுவலகத்தில் 05 காணிகள் மற்றும் வெலிசர உப அலுவலகத்தில் ஒரு | உள்ளபடியான விற்பனை விலையின் அடிப்படையில் வரித் தொகை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கூறுகளாக்கப்பட்டு விற்பனை செய்யும் காணிகள் தொடர்பாக ஆராய்ந்து மீண்டும் உரிய மதிப்பீடின் அடிப்படையில் 01 சதவீத பணம் அறவிடுவதற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. |

காணி விற்பனையினால் ரூபா 1,770,305 தொகையான வரித் தொகை அறவிடப்பட்ட போதிலும், உள்ளபடியான விற்பனை விலை அடிப்படையாகக் கொள்ளப்படாமையினால் சபைக்கு கவனத்தில் கொள்ளக்கூடிய வருமானம் ஒன்று இழக்கப்பட்டிருந்தது.

**(இ) கடைகளை வாடகைக்கு வழங்குதல்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ஹெந்தல உப அலுவலகத்திற்குரிய 04 கடைகள் 2007 ஆம் ஆண்டில் இருந்தும், ஒரு கடை 2013 ஆம் ஆண்டில் இருந்தும், ஒரு கடை 2017 ஆம் ஆண்டில் இருந்தும், 02 கடைகள் 2016 ஆம் ஆண்டில் இருந்தும் வாடகைக்கு வழங்கப்படாமல் காணப்பட்டது. | எதிர்பார்த்த நலன்களை கைப்பற்றிக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | அந்த கடைகள் பல சந்தர்ப்பங்களின் போது கேள்வி கோரப்பட்ட போதும் விண்ணப்பதாரர்கள் முன்வராமையினால் வாடகைக்கு வழங்கப்படாமல் சபையின் பயன்பாட்டிற்காக ஈடுபடுத்தப்பட்டது. |

## 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

### 3.4.1 சொத்துக்களில் இருந்து பெறவேண்டிய வருமானம் பெறப்படாமை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பிரீத்திபுற குளிக்கும் இடத்தில் நீர்த்தாங்கி உடைந்து விழுந்து நீர் வழங்கல் தடைப்பட்டமையினால் 2014 யூலை மாதம் முதல் வருமானம் தடைப்பட்டிருந்தது. அந்த திகதியில் இருந்து இதுவரையும் அது மறுசீரமைக்கப்பட்டு வருமானத்தை உழைப்பது தொடர்பில் சபை கவனம் செலுத்தியிருக்கவில்லை. | சபைக்குக் கிடைக்க வேண்டிய வருமானத்தை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | பிரீத்திபுற குளிக்கும் இடத்தில் நீர்த்தாங்கியை மீண்டும் பழுதுபார்த்து வருமானத்தை அறவிடுவதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

### 3.4.2 சொத்துக்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படாமை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபைக்குச் சொந்தமான மொத்த கிணறுகளும் உள்ளடங்கிய 49 காணிகளும், 21 விளையாட்டு அரங்குகளும், 21 சனசமூக மண்டபங்களும், 08 மயான நிலங்களும், 09 பொது வசதிகளுக்கான காணிகளும், | உரிய காணிகளுக்கான உரித்தை உறுதிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க | எதிர்காலத்தில் உரித்துறுதியை தயாரிப்பதற்கு தேவையான காணி அளத்தல் நடவடிக்கைகள் |

| | | |
|---|---|---|
| 39 ஏனைய காணிகளும், பௌதீக ரீதியில் உறுதிப்படுத்தப்படாத 13 காணிகளுமாக மொத்தமாக 160 காணிகள் காணப்பட்ட போதும் அதில் 78 காணிகளுக்கு மாத்திரமே உரித்துறுதி தயாரிக்கப்பட்டிருந்தது. | வேண்டும். | மேற்கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. |

### 3.4.3 கையேற்கப்படாத சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபைக்கு சொந்தமாக காணப்படுகின்ற 06 வாகனங்களை கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உரிய வாகனங்களை கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | அந்த சகல வாகனங்களையும் கையேற்கும் நடவடிக்கைகள் தாமதமின்றி மேற்கொள்ளப்படுகின்றது. |

### 3.4.4 விளைவற்ற / குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) 2009 ஆம் ஆண்டு முதல் கெப் வண்டியொன்றும், 2013 ஆம் ஆண்டு முதல் டெக்டெர் ஒன்றும், 2017 சனவரி முதல் 04 டெக்டெர்களும் உடைந்த / செயற்பாடற்ற நிலையில் ஹெந்தல மற்றும் வெளிசர வாகன தளங்களில் காணப்பட்டது. | வாகனங்களை ஏலத்தில் விற்பது தொடர்பாக விரைவாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | உடைந்த செயற்பாடற்ற நிலையில் காணப்படுகின்ற வாகனங்களை ஏலத்தில் விற்பனை செய்வதற்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. |
| (ஆ) உள்ளூராட்சி அமைச்சின் மூலம் 2014 நவம்பர் மாதத்தின் போது சபைக்கு வழங்கப்பட்டிருந்த 132 கல்வனைஸ் குழாய்கள் குறைவான பயன்பாட்டுடன் காணப்பட்டது. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | விடயங்களை கண்டறிந்து பின்னர் அறிக்கையிடப்படும். |
| (இ) பொது வசதிகளாக சபைக்குக் கிடைத்த 05 காணிகள் எந்தவொரு அபிவிருத்தி செயற்பாடுகளுக்கும் ஈடுபடுத்தப்பட்டிருக்கவில்லை. | பொது வசதிகளுக்காக கிடைத்துள்ள காணிகளை அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக ஈடுபடுத்தப்பட வேண்டும். | எதிர்காலத்தில் சகல பொது வசதிகளுக்கான காணிகளையும் அபிவிருத்தி செய்வதற்கு தேவையான நடவடிக்கைகள் வழங்கப்பட்டுள்ளது. |

### 3.4.5 சொத்துக்களை உரித்தற்றதாக்குதல்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 1988 ஆம் ஆண்டின் போது பேராசிரியர் நிகலஸ் மாகஸ் பிரனாந்து ரதகுறு ஹிமிபான அவர்களினால் ரூபா 188,000 பெறுமதியின் அடிப்படையில் நன்கொடை உரித்துறுதியொன்றில் வத்தளை பிரதேச சபைக்கு கையளிக்கப்பட்ட 11 ஏக்கர் 02 ரூட் 11 பேர்ச் பாரியளவான உஸ்வத்தகெட்டியாவ பார்ஸ் வத்த காணி, தலைவர் மற்றும் செயலாளரினால் 1991 ஆம் ஆண்டின் போது 57 காணிக் கூறுகள் அல்லது அதற்கு அண்மித்த எண்ணிக்கையொன்றில் பிரித்து நன்கொடை உரித்துறுதி மூலம் காணிகள் உரித்தற்றதாக்கப்பட்டிருந்தது. | சபை ஆதனங்களை பாதுகாத்தல் வேண்டும். | முறையாக பரீட்சித்து அறிக்கை சமர்ப்பிக்கப்படும். |

### 3.5 இனங்காணப்பட்ட நட்டங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| களஞ்சியத்தில் காணப்பட்ட இரும்பு பார் இருப்பொன்று 2019 மே மாதம் தொலைந்து போயிருந்ததுடன் மே 24 ஆம் திகதி வத்தளை பொலிஸ் நிலையத்திற்கு முறைப்பாடொன்று செய்யப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்தொடர் நடவடிக்கைகள் செய்யப்பட்டிருக்கவில்லை. | இது தொடர்பாக கண்டறிந்து எதிர்காலத்தில் சட்டரீதியான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | வத்தளை பொலிஸ் நிலையத்தின் பொறுப்பதிகாரியினால் அது தொடர்பாக பரீட்சிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது. |

### 3.6 பெறுகைகள்

### 3.6.1 வருடாந்த பெறுகைத் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2006 சனவரி 25 ஆம் திகதிய தேசிய பெறுகைகள் சுற்றறிக்கையின் இலக்கம் 08 இன் 4.2.1(ஆ) மற்றும் (இ) இன் பிரகாரம் பிரதான பெறுகைத் திட்டம் மற்றும் வருடாந்த விரிவான திட்டம் என்பன தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | உரிய சுற்றறிக்கையின் பிரகாரம் திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். | உரிய சுற்றறிக்கையின் பிராகரம் திட்டமொன்றை தயாரிப்பதற்காக கவனம் செலுத்தப்படும். |